செய்தி வெளியீடு எண்: 305/2018 நாள்: 29.05.2018

**வேலூர் மாவட்ட விவசாயிகளுக்கு 2.75 இலட்சம் க.மீ. வண்டல் மண் வழங்கி தமிழகத்தில் முதல் நிலை மாவட்டமாக உள்ளது!**

**பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கு ஏற்படும் பிரச்சனைகளை களையும் வகையில் அரசு அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும்!!**

**வேலூர் மாவட்டம் ஆற்காடு வட்டத்தில் நடைபெற்ற வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நிகழ்ச்சியின் நிறைவு நாளில் 254 பயனாளிகளுக்கு ரூ.1,74,99,000/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வருவாய் தீர்வாய அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்!!!**

வேலூர் மாவட்டம் ஆற்காடு வட்டத்திற்குட்பட்ட 102 கிராமங்களின் வருவாய் தீர்வாய (ஜமாபந்தி) நிகழ்ச்சி கடந்த 17.05.2018 அன்று துவங்கி பொதுமக்களிடம் மனுக்கள் பெறப்பட்டு வந்தது. இந்த ஜமாபந்தியின் நிறைவு நாள் இன்று 29.05.2018 மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:-

மண்ணையும், அதன் வளத்தையும் பேணிக் காக்கவும், மண்ணிலிருந்து பொன்னை விளைவிக்கும் உழவனின் மனக் குறைகளைக் களையவும், அவனது தேவைகளை நிறைவேற்றும், கிராமக் கணக்குகளைத் தணிக்கை செய்யவும் உருவாக்கப்பட்டதே "வருவாய் தீர்வாயம்" என்கிற ஜமாபந்தி. நில வருவாயை மட்டுமே அச்சாணியாகக் கொண்டு அரசுத் தேர் இயங்கி வந்த மன்னராட்சிக் காலத்தில், முகலாய முதலாம் அரசர் அக்பர் மூலம் வட இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்ட பசலி ஆண்டு என்கிற நடைமுறை பின்னர் கி.பி.1630-ம் ஆண்டு ஷாஜகான் ஆட்சியில் தென் இந்தியாவிலும் நடைமுறைக்கு வந்தது. ஆங்கிலேயர் ஆட்சியிலும் தொடர்ந்த இந்த நடைமுறையே இன்றைய சுதந்திர இந்தியாவிலும், ஜமாபந்தியாகத் தொடர்கிறது. இன்றளவும் வருவாய்த் துறை மூலம் ஆண்டுதோறும் நடத்தப்படும் அதிமுக்கியமான நிகழ்வாகவே கருதப்படுகிறது ஜமாபந்தி. அந்த வகையில் 1427 ஆம் பசலி ஆண்டு வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) தற்போது நடைபெற்று வருகிறது.

இந்தியா ஒரு விவசாய நாடு. விவசாயிகளுக்கு ஏற்படும் பிரச்சனைகளை தீர்ப்பதற்காக ஒவ்வொரு வருடமும் ஜமாபந்தி எனும் வருவாய் தீர்வாயம் நடத்தப்பட்டு விவசாயிகளின் பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்கப்படுகிறது. குறிப்பாக இந்த ஜமாபந்தியில் வருவாய் தீர்ப்பாய அலுவலரால் வட்டத்திற்குட்பட்ட விவசாய நிலங்களின் விவரம், அவற்றின் வருமான பதிவேடுகள் சரிபாக்கப்பட்டு தவறுகள் இருப்பின் நிவர்த்தி செய்யப்படும். மக்களின் குறைகளை நிவர்த்தி செய்ய அரசால் அம்மா திட்ட முகாம், குறை தீர்க்கும் நாள் முகாம், மனு நீதி நாள் முகாம் போன்ற பல்வேறு முகாம்கள் நடத்தப்பட்டாலும் விவசாயிகளின் குறைகளை தீர்க்க இந்த ஜமாபந்தியில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது. 17.05.2018 அன்று தொடங்கப்பட்ட இந்த ஜமாபந்தியில் 29.05.2018 இன்று வரை 643 மனுக்கள் பெறப்பட்டு 460 மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளது. மீதமுள்ள 183 மனுக்கள் மீது உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜமாபந்தி நாட்களில் நில அளவை அலுவலர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் தங்களுடைய பணியை சரிவர செய்கிறார்களா அதாவது நிலத்தின் பதிவேடுகள் மற்றும் தற்போதைய கணினி முறையில் பதிவுகள் சரியாக உள்ளதா என ஆய்வு செய்யப்படுகிறது. நிலவுடைமை பதிவேடுகளில் தவறுகள் இருப்பின் அதை சரி செய்வது அலுவலர்களின் முக்கிய கடமையாகும். விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் தீர்வு காணும் வகையில் அரசு அலுவலர்கள் தங்கள் பணியை செய்ய வேண்டும். அரசு பல்வேறு வகையான திட்டங்களை விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. குறிப்பாக விவசாயத்திற்கு தேவையான நீர் நிலைகளான அதாவது ஏரிகளை விவசாயிகளே பராமரிக்க குடிமராமத்து திட்டம் நம்முடைய மாவட்டத்தில் கடந்த ஆண்டில் ரூ.3 கோடி மதிப்பில் செயல்படுத்தப்பட்டது.

அதே போன்று விவசாய நிலங்களின் மண்வளத்தை பெருக்கிட மாவட்டத்திலுள்ள 974 ஏரிகளிலிருந்து 2.75 இலட்சம் க.மீ.வண்டல் மண் எடுக்கப்பட்டு 2500 விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு மாநிலத்திலேயே இலவச வண்டல் மண் வழங்குவதில் முதல் நிலையில் வேலூர் மாவட்டம் உள்ளது.

மேலும் சொட்டு நீர் பாசனத்திற்கு வழங்கப்படும் விவசாய கருவிகள் 100 சதவிகித மானியத்தில் வழங்கப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் விவசாயம் தொடர்பான பணிகள் மட்டுமே தற்போது செய்ய வேண்டும் என மத்திய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதனடிப்படையில் வேலூர் மாவட்டத்தில் 100 நாள் வேலை திட்டத்தில், 484 தனி நபர் பண்ணை குட்டைகள், உரம் அமைக்கும் கொட்டகைகள், வரப்பு அமைத்தல், 3 விவசாய கிணறுகள் அமைத்தல், 8750 வீடுகளில் உறிஞ்சு குழிகள் அமைத்தல், சமுதாய சொத்துக்களை (அங்கன்வாடி கட்டடம் கட்டுதல், பால் உற்பத்தியாளர் சங்க கட்டடம் கட்டுதல்) ஏற்படுத்துதல் போன்ற பணிகளை செய்ய ஆணை இடப்பட்டுள்ளது. அருகிலுள்ள கணியம்பாடி ஊராட்சியில் நாகநதி புணரமைப்பு திட்டத்தில் 349 உறை கிணறுகள் 210 தடுப்பணைகளும் கட்டப்பட்டு நிலத்தடி நீர் மட்டம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதே போன்று கந்திலி, திருப்பத்தூர், பேர்ணாம்பட்டு, திமிரி, குடியாத்தம் மற்றும் அணைக்கட்டு ஒன்றியங்களிலும் உறைகிணறுகள் அமைக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது. இதுபோன்று மக்களுக்கும் விவசாயிகளுக்கும் தொடர்ந்து தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வருகிறது. இந்த நலத்திட்டங்களை முறையாக அனைத்து விவசாயிகளும் பயன்படுத்தி கொண்டு பயனடைய வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இன்றைய ஜமாபந்தி நிகழ்ச்சியில் வருவாய்த்துறையி சார்பில் 60 நபர்களுக்கு ரூ.36,14,400/- மதிப்பீட்டில் இலவச வீட்டுமனைப்பட்டாக்களும், 40 நபர்களுக்கு குடும்ப அட்டைகள், 40 நபர்களுக்கு ரூ.4,80,000/- மதிப்பில் முதியோர் உதவித் தொகையும், ஒரு நபருக்கு ரூ.3,00,000/- மதிப்பிலான விபத்து நிவாரணத் தொகை, ஒரு நபருக்கு வாரிசு சான்றிதழ், 7 நபருக்கு பட்ட மாற்றம், 32 நபர்களுக்கு இலவச வண்டல் மண் எடுக்க ஆணை, ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் 1 பயனாளிக்கு ரூ.4,000/- மதிப்பிலான சலவை பெட்டியும், ஆற்காடு நகராட்சி அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் சார்பில் 50 நபர்களுக்கு ரூ.1,05,00,000/- மதிப்பிலான வீடுகள், வேளாண்மைத்துறையின் மூலம் திமிரியில் உள்ள 2 வேளாண்மை குழுக்களுக்கு ரூ.10,24,900/- மதிப்பிலான விவசாய கருவிகள் மற்றும் விதைகள், ஆற்காடு பகுதியில் 5 பயனாளிகளுக்கு ரூ.34,700/- மதிப்பிலான விவசாய கருவிகள் மற்றும் விதைகள், ஆற்காடு மற்றும் திமிரி வட்டாரத்தில் 9 பயனாளிகளுக்கு ரூ.15,30,000/- மதிப்பிலான பிரதம மந்திரி குடியிருப்புகள், மாவட்ட மறுவாழ்வுத் துறையின் மூலம் 2 பயனாளிகளுக்கு ரூ.11,000/- மதிப்பிலான மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் மூன்று சக்கர வாகனங்கள், 4 பயனாளிகளுக்கு இருளர் குடியிருப்பில் இலவச மின் இணைப்பு ஆக மொத்தம் 254 நபர்களுக்கு ரூ.1 கோடியே 74 இலட்சத்து 99 ஆயிரம்(ரூ.1,74,99,000/-) மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப. அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கோ.அரி (அரக்கோணம்), தென்னக ரயில்வே ஆலோசனைக் குழு உறுப்பினர் சுமைதாங்கி திரு.சி.ஏழுமலை, ஒன்றியக்குழு முன்னாள் தலைவர் திரு.தாஜ்புராகுட்டி (ஆற்காடு), திரு.கிருஷ்ணன் (திமிரி), மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் திரு.வேலாயுதம், திமிரி ஒன்றிய விவசாயிகள் சங்கத் தலைவர் திரு.ஏகாம்பரம், வட்டார வளர்ச்சி திரு.தண்டாயுதபாணி, திரு.வேதமுத்து, திரு.வின்செண்ட், உதவி இயக்குநர்கள் (வேளாண்மை) திரு.வின்செண்ட் ஜெயக்குமார், திருமதி.சரஸ்வதி, மண்டல துணை வட்டாட்சியர் திரு.நடராஜன், தனி வட்டாட்சியர் (ஆதிதிராவிடர் நலம்) திரு.வி.ரமேஷ், வட்ட வழங்கல் அலுவலர் திரு.சுரேஷ், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், வேலூர்-9.